| வருட இறுதியில் மீதி | | 234,565.00 | 231,594 |
| வருட இறுதியில் தேறிய மீதி | | - | 2,971 |

| 11. வர்த்தக மற்றும் ஏனைய பெறல் | | | |
|---|---|---|---|
| வருமானம் பெறல் -பாடநெறி கட்டணம் | | - | 293,000 |
| கடன்பட்டோர் | 11.1 | 3,109,750.00 | 3,614,300 |
| பணிக்குழாத்தில் கடன்பட்டோர் | 11.2 | 1,049,351.00 | 882,766 |
| | | **6,159,101.00** | **4,790,066** |

| 11.1 கடன்பட்டோர் | | |
|---|---|---|
| கடன்பட்டோர் - பிரதான அலுவலகம் | 10,608,700.00 | 7,587,100 |
| மாத்திளைக் கிளை | 808,700.00 | 640,450 |
| | 11,417,400.00 | 8,227,550 |
| நிச்சயமற்ற கடனுக்காக | | |
| ஒதுக்கீடு - பிரதான அலுவலகம் | (5,782,200.00) | (4,160,300) |
| மாத்தளைக் கிளை | (525,450.00) | (452,950) |
| | 5,109,750.00 | 3,614,300 |

| 11.2 பணிக்குழாத்தில் கடன்பட்டோர் | | |
|---|---|---|
| கடன் - எம்.டப்ளியூ.சனத் | - | 94,455 |
| எம்.டி.டீ.விஜேசிறி | 250,000.00 | 15,000 |
| சமல் ஹெட்டியாராய்ச்சி | 525,286.00 | 548,007 |
| டப்ளியூ.ஏ.எம்.லங்காதிலக்க | 150,005.00 | - |
| சமந்த குலதுங்க | - | 25,000 |
| பீ.கே.டி.லியனகே | 124,060.00 | 190,720 |
| யாப்பா தஹநாயக்க | - | 8,333 |
| கொண்டாட்டக் கொடுப்பனவு - பிரதான அலுவலகம் | - | 1,250 |
| | 1,049,351.00 | 882,766 |

<u>இலங்கை அச்சக நிறுவகம்</u>
<u>நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகள்</u>

**டிசம்பர் 31ஆம் திகதியில்**

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **12. முற்பணம் மற்றும் முன்னர் செலுத்தியவை** | | |
| BMICH | - | 300,000 |
| **முன்னர் செலுத்தியவை** | | |
| விரிவுரைக் கட்டணம் - கொழும்பு பல்கலைக்கழகம | 672,000.00 | 1,344,000 |
| இணையத்தளம் ஆரம்பிப்பதற்கான கட்டணம் | 11,205.17 | 6,979 |
| மென்பொருள் சேவைக் கட்டணம் | 7,300.00 | - |
| | 690,505.17 | **1,650,979** |
| **13. குறுங்கால முதலீடு** | | |
| திறைசேரி உண்டியல் | 3,067,187.14 | 2,761,135 |
| திறைசேரி உண்டியலுக்கான வட்டி | 111,806.60 | 134,103 |
| | 3,178,993.74 | **2,895,238** |
| நிலையான வைப்பு | 94,095,634.79 | 64,711,783 |
| நிலையான வைப்புக்கான வட்டி | 5,256,583.05 | 3,732,862 |
| | **99,352,217.84** | **68,444,645** |
| | **102,531,211.58** | **71,339,883** |
| **14. காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | |
| மக்கள் வங்கி - நடைமுறைக் கணக்கு 1 | 5,046,059.94 | 2,738,890 |
| நடைமுறைக் கணக்கு 2 | 735,372.91 | 1,086,123 |
| கையிருப்புக் காசு | 5,071.00 | 5,071 |
| | **5,786,503.85** | **3,830,084** |
| **15. திரண்ட நிதியம்** | | |
| ஜனவரி 1ஆம் திகதியில் மீதி | 99,859,882.92 | 90,511,140 |
| விளக்க வருமானக் கூற்றிலிருந்து மாற்றுதல் | 14,709,362.12 | 9,348,743 |
| **டிசம்பர் 31ஆம் திகதியில் மீதி** | **114,569,245.04** | **99,859,883** |

## இலங்கை அச்சக நிறுவகம்
## நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகள்

| | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **16. ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீடு** | | | |
| ஜனவரி 1ஆம் திகதிக்கு மீதி | | 1,401,291.00 | 1,134,549 |
| **வருடத்தினுள் ஒதுக்கம்** | | | |
| பிரதான அலுவலகம் | | 297,918.50 | 230,484 |
| மாத்தளைக் கிளை | | 44,705.50 | 36,259 |
| | | **1,743,915.00** | **1,401,291** |
| வருடத்துக்குள் செலுத்தல் | | (147,955.00) | |
| **டிசம்பர் 31இல் மீதி** | | **1,595,960.00** | **1,401,291** |
| 17. **பெற்ற உதவிகள்** | | | |
| **ஜனவரி 1ஆம் திகதிக்கு மீதி** | | 50,000,000.00 | - |
| வருடத்தினுள் பெற்ற உதவி | | 18,065,681.00 | 50,000,000 |
| உதவி மதிப்பிறக்கம் | | (1,701,642.02) | - |
| **டிசம்பர் 31இல் மீதி** | | **66,364,038.98** | **50,000,000** |
| **18. வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தல்** | | | |
| | குறிப்பு | | |
| முற்பணத்தில் பெற்ற வருமானம் | | 1,649,350.00 | 1,109,350 |
| விருது விழாவிற்காக முற்பணம் பெறல் | | - | 394,100 |
| அட்டுறுச் செலவுகள் | 18.1 | 2,075,259.10 | 1,900,570 |
| | | **3,724,609.10** | **3,404,020** |

## இலங்கை அச்சக நிறுவகம்
## நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகள்

**டிசம்பர் 31ஆம் திகதியில்**

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **18.1 அட்டுறுச் செலவுகள்** | | |
| காரியாலய உதவியாளருக்கான கொடுப்பனவு | - | 16,625 |
| கணக்கியல் மற்றும் ஏனைய தொழில்சார் கட்டணங்கள் | 114,840.00 | 81,710 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,002,480.00 | 740,280 |
| ஊதியம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு | 42,728.00 | 9,572 |
| செயன்முறைக் கட்டணங்கள்-பிரதான அலுவலகம் | 141,095.50 | 214,770 |
| விரிவுரைக் கட்டணங்கள் | 177,160.00 | 239,100 |
| இணையச் சேவைக் கட்டணம் | 8,571.74 | 2,410 |
| நலன்புரிச் செலவு | 14,364.00 | 24,736 |
| ஒன்றிணைந்த நிதியம் | 83,861.39 | 79,043 |
| தொலைபேசி - தலைமையகம் | 7,439.35 | 10,342 |
| மாத்தளை | - | 3,078 |
| நிழற்பிரதிச் செலவீனம் | 17,761.36 | 15,842 |
| தகவல் தொழினுட்ப உபகரணக் கட்டணம் | 6,000.00 | - |
| பணிக்கொடைக் கொடுப்பனவு- தலைமையகம் | 366,677.00 | 312,500 |
| மாத்தளை | 50,000.00 | 30,000 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | - | 2,200 |
| மின்சாரம் - மாத்தளை | 2,500.00 | 881 |
| அச்சு மற்றும் எழுதுகோல்கள் | - | 750 |
| விளம்பரச் செலவு | - | 68,931 |
| பரீட்சை செலவுகள் | 10,850.00 | 7,800 |
| பணிப்பாளர் கூட்டத்திற்கு வருகை கொடுப்பனவு | 6,000.00 | - |
| செலுத்த வேண்டிய பல்வேறு செலுத்தல்கள் | 5,430.76 | - |
| இணைப்பாளர்க் கட்டணம் -(NVQ Print & Graphic Art Technology) | -- | 20,000 |
| ஆனைத்துப் பரீட்சைக் கட்டணம் - NVQ நிகழ்ச்சி | - | 20,000 |
| சுத்தீகரிப்புச் செலவு | 11,500.00 | - |
| பரீட்சைத் தாள் திருத்தச் செலவு | 6,000.00 | - |
| | **2,075,259.10** | **1,900,570** |

**19. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் செய்யும் கொடுக்கல் வாங்கல்**

இலங்கை அச்சக நிறுவகத்தின் தலைவியான திருமதி. பீ.கே.டீ.லியனகே அரச அச்சகத் திணைக்களத்தில் அரச அச்சகர் பதவியையும் வகிக்கிறார். பின்வரும் கொடுக்கல் வாங்கல் இந்த சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மத்தியில் இவ்வருடத்தில் இடம்பெற்றுள்ளது.

| | |
|---|---|
| கூலி, மின்சாரம் மற்றும் நீர் | 391,500 |

# இலங்கை அச்சக நிறுவகத்தின் நிதிக்கூற்று
# மற்றும் கணக்காய்வு அறிக்கை
# 2019

பதிவாளர்
இலங்கை அச்சக நிறுவகம்

**இலங்கை அச்சக நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதித் தேவைகள் சம்பந்தமாக 2018 இல.19ஆம் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வு அறிக்கை**

1. நிதிக்கூற்று

1.1 வரைபுபடுத்தப்பட்ட கருத்து

இலங்கை அச்சக நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்குரிய நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்துடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மாற்றமடையும் கூற்று மற்றும் அத்தினத்துடன் முடிவடையும் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்குரிய குறிப்புகள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கிய 2019 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) யாப்புடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018 இல.19 தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இல.38 நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியல் யாப்பின் 154(6) யாப்பிற்கமைவாக எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் வரைபுபடுத்தப்பட்ட கருத்திற்கு அடிப்படையான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்கள் தவிர. நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்கான நிதிநிலைமை மற்றும் அத்தினத்துடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச்செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் சிறிய மற்றும் மத்திய அளவிலான வர்த்தகங்களுக்கான இலங்கைக் கணக்காய்வு தரங்களுக்கு ஏற்ப உண்மையானதும் மற்றும் நியாயமான நிலைகளையும் பிரதிபலிக்கின்றது என்பது எனது கருத்தாகும்.

1.2 வரைபுபடுத்தப்பட்ட கருத்திற்கான அடிப்படை

(அ) பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் அரச வணிகங்கள் மற்றும் பொது கணக்கீட்டு நிலையை(Public Accountability) கொண்ட நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கைக் கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது என்ற போதிலும் நிதிக்கூற்றுடன் முன்வைக்கப்பட்டிருந்த குறிப்புகள் இல. 2.1(அ)விற்கமைய நிறுவகத்தின் நிதிக்கூற்று சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கைக் கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்காய்வு நியமங்களில் அத்தியாயம் 17இன் 17.15 A பிரிவுகளுக்கமைய, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்மிகு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்து சரியான பெறுமதியை நிதிக்கூற்றுகளில் குறிக்காமையினால், மேலும் பயன்படுத்தும் கிரயம் 12,582,309 ரூபாவான சொத்துக்கள் 228 வகையின் விபரங்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வில்லை.

(இ) வரைவிளக்கமளிக்கப்பட்ட அனுகூல திட்டங்களை அளவிடுவதற்காக எதிர்வுகூறப்பட்டிருந்த அலகுக் கடன் முறை(Projected Unit Credit Method) பயன்படுத்துவதாக கணக்கீட்டு குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஊழியர் அனுகூலங்கள் சம்பந்தமாக சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் அத்தியாயம் 28இல் 28.17 மற்றும் 28.18 பிரிவுகளுக்கமைய அனுகூலங்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 0.1012 ஹெக்டேயர் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) நிதி நிறுவன தர முகாமைத்துவ தொகுதிற்காக 2018 செப்டெம்பர் 14 முதல் 2021 செப்டெம்பர் 13 வரையிலான காலப்பகுதியினுள் செலவிடப்பட்ட 302,755 ரூபா மொத்த செலவை மீளாய்விற்குள்ளான ஆண்டின் செலவாக கணக்கிட்டிருந்தமையினால் வருடத்தின் மிகை 201,837 ரூபா அதிகமாகவும் எதிர்கால செலுத்தல் 172,402 ரூபா குறைவாகவும் நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1.3 நிதிக்கூற்று சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் நிர்வாகம் செய்யும் தரப்பினரினதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்று சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப தயாரித்தலும் நியாயமாக முன்வைத்தலும் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவறி பிழையான கூற்றுகளின்றி நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க ஏதுவான விதத்தில் தேவையான உள்ளக நிர்வாகத்தைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது நிறுவகத்தைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதோடு, முகாமைத்துவம் நிறுவகத்தைத் தீர்த்துக்கட்ட எண்ணுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாது அதன் செயற்பாட்டை நிறுத்த செயற்படுமாயின் அன்றி தொடர்ச்சியான இருப்பின் அடிப்பபடையில் கணக்கிடுதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு சம்பந்தமான பொறுப்பு நிர்வகிக்கும் சாராரினால் வகிக்கப்படும்.

2018 இல 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவிற்கமைவாக நிறுவகத்தின் வருடாந்த மற்றும் நடப்பு நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க முடியுமான வகையில் தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் வைப்புகள் பற்றிய ஏடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக நடாத்திச் செல்ல வேண்டும்.

1.4 நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளினால் ஏற்படும் அளவறி பிழையான கூற்றுகள் அற்றது எனும் நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கும் கணக்காய்வாளரின் அறிக்கையை முன்வைப்பது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்ட உறுதிப்படுத்தல் என்ற போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு நடத்தும்போது அது எப்போதும் அளவறி குறை கூற்றுகளை வெளிப்படுத்துவது என்பதை உறுதிப்படுத்தலாக இருக்காது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டாக தாக்கம் செலுத்துவதால் அளவறி குறைகூற்று ஏற்படக்கூடியதோடு, இந்நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார முடிவுகளின் மீது தாக்கம் ஏற்படுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

* மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் ஏற்படக்கூடிய அளவறி பிழையான கூற்றுகளின் இடர்களை இனங்காணும்போது மற்றும் மதிப்பிடும்போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளை திட்டமிடுவதனூடாக மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் இடர்களைத் தவிர்ப்பதற்கு, போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது கருத்திற்கு அடிப்படையாகும். அளவறி பிழையான கூற்றுகளால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கம் வலிமையானதாவதோடு தவறான கூட்டமைப்பு, போலி ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக நிர்வாகங்களைத் தவிர்த்தல் மோசடி ஏற்படக் காரணமாகும்.
* சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் சம்பந்தமாக அறிவைப் பெற்றுக்கொண்ட போதிலும், உள்ளக நிர்வாகத்தின் உற்பத்தித்திறனின் சிறப்புப் பற்றிக் கருத்து தெரிவிப்பதற்கு கருதப்படவில்லை.

* பயன்படுத்தப்பட்ட கணக்காய்வுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயம் மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட குறித்த வெளிப்பாடுகளின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டது.
* சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அளவறி நிச்சயமற்ற நிலை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்காய்விற்காக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற நிலை உள்ளதாக நான் தீர்மானிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அவை சம்பந்தமான வெளியிடுதலுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியதோடு, அந்த வெளியிடுதல் போதுமானதாக இல்லையெனில் எனது கருத்து திருத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளுக்கமைய தொடர்ச்சியான இருப்பு முற்றுப்பெறக்கூடும்.

வெளியிடுதல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்ததோடு அதற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பது மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டறிதல், முக்கிய உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வாகத்தினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதித் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இல் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இல.19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைவாக எனது அறிக்கையில் வரைபுபடுத்தப்பட்ட கருத்திற்கான அடிப்படைப் பகுதியில் விளக்கமளிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டதோடு எனது ஆய்வில் கண்டறிந்த விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.
- 2018 இல.19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைவாக நிறுவகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்ததாக உள்ளது.
- 2018 இல.19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைவாக இவ்வறிக்கையில் 1.2(ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள

அவதானிப்புகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்டிருந்த சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் உள்ளடங்குகின்றன.

பின்பற்றிய வழிமுறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகள் அடிப்படையில் மற்றும் அளவறி விடயங்களின் மட்டுப்படுத்தலுக்குள் பின்வரும் கூற்றுகளை முன்வைக்கும் அளவிற்கு எதையும் என்னால் அவதானிக்க முடியவில்லை.

* 2018 இல.19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைவாக நிறுவகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவருக்கு நிறுவகம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் ஒன்று சம்பந்தமாக நேரடியாகவோ வேறு விதத்தில் சாதாரண வணிக நிலைக்கு அப்பால் தொடர்பு உள்ளமை.
* 2018 இல.19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைவாக பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதாவது உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளமை.

| சட்டவிதிகள்/கட்டளைக்கான அவதானம் | விளக்கம் |
| --- | --- |
| (ii) 2003 ஜுன் 02ஆம் திகதி இல PED/12 அரச வணிக சுற்றுநிரூபத்தின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24ஆம் திகதி இல.01/2004 எனும் திறைசேரி சுற்றுநிரூபம் | கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று கணக்காய்வாளர் நாயகத்திடம் முன்வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வுக்குள்ளான ஆண்டின் நிதிக்கூற்றுகள் முன்வைத்தலை 2020 ஜுன் மாதம் 15ஆம் திகதி வரை தாமதமாக்கப்பட்டிருந்தது. |

* 2018 இல.19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைவாக நிறுவகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளமை.
* 2018 இல.19 தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைவாக நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயன்மிக்கதாக உரிய காலப்பகுதிகளில் உரிய சட்டவிதிகளுக்கமைவாக பெறுகை நடவடிக்கைகளை பயன்படுத்தாமை.

3. வேறு அவதானிப்புகள்

(அ) நிறுவகத்தின் நிரந்தர ஊழியர்கள் அல்லாத நிர்வாக சபையின் தலைவராகச் செயற்படும் அரச அச்சகத் திணைக்களத்தின் அச்சகர் உட்பட நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக சபையின் அனுமதியின்றி நிறுவகத்தின் இருபது ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களென போலி தகவல்களை முன்வைத்து 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 50,000 ரூபா வீதம் 200,000ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அச்சக நிறுவகத்தில் 2017 நவம்பர் 01ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாக உள்ள பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கமைய தகுதியான உத்தியோகத்தரை சேர்த்துக்கொள்ளாது, அப் பதவியில் பணியாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தரை 2 வருட காலங்களுக்காக முறையான அனுமதியின்றி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக வேதனமாகவும் வாகனக் கொடுப்பனவாகவும் 120,000 ரூபாவும் 150 லீற்றர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2019 நவம்பர் 01ஆம் திகதியிலிருந்து மேலும் 2 வருட காலங்களுக்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்ததோடு, கொடுப்பனவை தீர்மானித்த விதம் மற்றும் அதற்காக பெற்ற அனுமதி கணக்காய்வில் முன்வைக்கப்பட வில்லை.

(இ) அச்சக நிறுவகத்தினால் தேசிய தொழிற் தகைமையுள்ள ஒரு பாடநெறி உட்பட 13 பாடநெறிகளுக்காக மீளாய்விற்குள்ளான ஆண்டினுள் 932 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருந்ததோடு, அதில் 111 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். 2019ஆம் ஆண்டில் 18 பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவு செய்திருந்த போதிலும் 9 பாடநெறிகளுக்கு (பாடநெறிகளில் 50%) 20 மாணவர்களுக்கும் குறைவாகவே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஈ) இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 4ஆம் பிரிவிற்கமைய இந்நிறுவகம் பிரதான நோக்கங்கள் 7இன் கீழ் நிறுவப்பட்டதோடு, அதன் 3 நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான நிகழ்ச்சிகள் மட்டுமின்றி சட்டத்தின் 5ஆம் பந்தியில்(இ) பிரிவிற்கமைய செய்ய வேண்டிய பணிகள் 07ஐ செயற்படுத்துவதற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டினுள் வருடாந்த செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

W.P.C.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

# இலங்கை அச்சக நிறுவகத்தின் நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியானதும் ஒழுங்குவிதித் தேவைகள் பற்றிய கணக்காளர் நாயகத்தின் அறிக்கைக்கான விடைகள் 2019

**இலங்கை அச்சக நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதி கூற்று மற்றும் வேறு சட்ட ரீதியான ஒழுங்குவிதித் தேவைகள் பற்றிய 2018 இல. 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12ஆம் பிரிவிற்கிணங்க கணக்காளர் நாயகத்தின் அறிக்கை**

1.2.வரைபுப்படுத்தப்பட்ட கருத்திற்கான அடிப்படை

(அ) வினா:-

பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் அரச வணிகம் மற்றும் பொதுக் கணக்கீட்டு நிலையைக் (Public Accountability) கொண்ட நிறுவனங்கள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது என்ற போதிலும் இலங்கை அச்சக நிறுவகம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

(அ) விடை:-

நிதி அறிக்கை தயாரிக்கும் அடிப்படை

அது சம்பந்தமாக எமது பட்டயக் கணக்காளர்களான D.H.P.முனவீர நிறுவனத்திடம் வினவிய போது அவர்களின் கருத்தை உங்களிடம் அறியத்தருகின்றேன்.

இலங்கை அச்சக நிறுவகத்தின் நிதி அறிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது. அந்நிதி அறிக்கைகள் தவறான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் உங்கள் தெளிவூட்டலுக்கமைய இந்நிறுவகம் பொருட்கள் விற்பனை செய்யும் அல்லது சேவைகள் வழங்கும் அரச கூட்டுத்தாபனம் அல்லாததால் தொடர்ந்தும் நிறுவகத்தின் நிதி அறிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட வேண்டும் என்பது எமது கருத்தாகும்.

குறித்த கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நோக்க எல்லை குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், முக்கியமாக அந்நோக்க எல்லைக்கு அப்பால் செல்லும் பகுதியின் நிழல் பிரதியையும் இத்துடன் உங்கள் கவனத்திற்காக அனுப்புகின்றோம். இது சம்பந்தமாக மேலும் ஆராய்ந்து எம்மை அறிவுறுத்துமாறு வேண்டுகின்றேன்.

(ஆ) வினா:-

சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அத்தியாயம் 17இல் 17.15A பிரிவிற்கமைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்மிகு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்து அதன் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்படாமை காரணமாக, மேலும் பயன்படுத்தும் கிரயம் 12,582,309 ரூபா சொத்துகளின் 228 வகையின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வில்லை.

(ஆ) விடை:-

எதிர்வரும் ஆண்டில் இவ்வாறான பூச்சிய பெறுமதியுள்ள சொத்துகள் மீளக் கணக்கிட்டு நிதிக் கூற்றுக்களில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) வினா:-

வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்களை அளவிடுவதற்காக எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறை (Projected Credit Method) பயன்படுத்துவதாக கணக்கீட்டுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஊழியர்களின் அனுகூலங்கள் சம்பந்தமாக சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அத்தியாயம் 28இன் 28.17 மற்றும் 28.18 பிரிவுகளுக்கமைவாக அனுகூலங்கள் கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) விடை:-

எதிர்வரும் காலங்களில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஈ) வினா:-

2013 செப்டெம்பர் மாதத்தில் இலங்கை அச்சக நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 0.1012 ஹெக்டேயர் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வில்லை.

(ஈ) விடை:-

இக்காணியின் ஒரு பகுதி மெகா பொலிஸ் நிறுவனத்தினால் லெஸ்லி ரனகல வீதியை விரிவுபடுத்துவதற்காக கைப்பற்றப்பட்டது. மீள அளவீடு செய்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

(03) வேறு கணக்காய்வு அவதானிப்புகள்

வினா:-

| சட்டவிதிகள்/கட்டளைக்கான அவதானம் | விளக்கம் |
|---|---|
| 2003 ஜூன் 02 திகதியுடைய PED/12 அரச வணிக சுற்றுநிரூபத்தில் 6.5.1 பிரிவில் மற்றும் 2004 பெப்ரவரி 24 இல. 01/2004 | கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றை கணக்காளர் நாயகத்திடம் முன்வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்விற்குள்ளான ஆண்டின் நிதிக் கூற்று முன்வைப்பது 2020 ஜூன் 15ஆம் திகதி வரை தாமதமாக்கப்பட்டிருந்தது. |

விடை:-

இவ்வாறு தாமதமாவதற்கான காரணம் இலங்கை அச்சக நிறுவகத்தின் நிர்வாக சபையை நியமிக்கத் தாமதமானதாகும். அதற்கமைய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் நிதி அறிக்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்து கையொப்பமிட்டு அனுப்பவேண்டியிருந்ததால் இவ்வாறு தாமதமானது.

(அ) வினா:-

நிறுவகத்தின் நிரந்தர ஊழியர்கள் அல்லாத நிர்வாக சபையின் தலைவராகச் செயற்படும் அரச அச்சகத் திணைக்களத்தின் அச்சகர் உட்பட நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக சபையின் அனுமதியின்றி நிறுவகத்தின் இருபது ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களென போலி தகவல்களை முன்வைத்து 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 50,000 ரூபா வீதம் 200,000ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டிருந்தது.

(அ) விடை:-

2019ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சான்றிதழ் வழங்கும் விழாவில் 50,000 ரூபா வீதம் பணப் பரிசு வழங்கப்பட்டிருப்பது இலங்கை அச்சக நிறுவகத்தில் பல வருடங்களாகப் போதனாசிரியர்களாகச் செயற்பட்டவர்கள் நான்கு பேருக்காகவே. 20 ஆண்டுகாலமாக அவர்கள் செய்த மகத்தான சேவையை கௌரவிக்கும் முகமாகவே இப்பணப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அச்சக நிறுவகம் சுய நிதியீட்டும் நிறுவனமாவதோடு, அதன் பிரதான வருமான வழியாக இருப்பது பாடநெறிகளினூடாக ஈட்டும் நிதியே. ஆகவே இவ் அனைத்துப் பாடநெறிகளையும் உரிய தரத்துடன் பேணுவது கட்டாயமான விடயமாகும்.

இதற்காக இப் போதனாசிரியர்களின் அர்ப்பணிப்பு வரவேற்கத்தக்கது. மேலும் எமது நிறுவகத்தின் போதனாசிரியர்களுக்கு செலுத்தும் கட்டனம் ஏனைய போட்டி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகும். அவ்வாறு இருக்கும் போது இப் போதனாசிரியர்கள் அச்சகத் துறையை கட்டியெழுப்புவதற்காக அவர்களின் உழைப்பையும் அறிவையும் விரிவாகப் பயன்படுத்தி பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செய்யும் சேவையை நாம் மதிக்க வேண்டும். இதனை பணத்தினால் மதிப்பிட முடியாது.

அக்காலத்தில் எமது நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த பதவி நிலை நிர்வாக சபை உறுப்பினர்கள் நான்கு பேரைத் தவிர ஏனைய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதனாலும் இப் பரிசளிப்பு விழா 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றதாலும் நிறுவகத்தின் தலைவர் என்ற ரீதியில் இம் முடிவை எடுத்து இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 11ஆம் பிரிவிற்கிணங்க செயற்பட்டுள்ளார்.

(ஆ) வினா:-

இலங்கை அச்சக நிறுவகத்தில் 2017 நவம்பர் 01ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாக உள்ள பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கமைய தகுதியான உத்தியோகத்தரை சேர்த்துக்கொள்ளாது, அப் பதவியில் பணியாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தரை 2 வருட காலங்களுக்காக முறையான அனுமதியின்றி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக வேதனமாகவும் வாகன கொடுப்பனவாகவும் 120,000 ரூபாவும் 150 லீற்றர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2019 நவம்பர் 01ஆம் திகதியிலிருந்து மேலும் 2 வருட காலங்களுக்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்ததோடு, கொடுப்பனவை தீர்மானித்த விதம் மற்றும் அதற்காக பெற்ற அனுமதி கணக்காய்வில் முன்வைக்கப்பட வில்லை.

(ஆ) விடை

இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 17 மற்றும் 19ஆம் பந்திகளுக்கமைய நிர்வாக சபைக்கு அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட பணிக்குழாத்தினரை நியமிக்கவோ நீக்கவோ பூரண அதிகாரம் உள்ளது. அத்தோடு சட்டத்தின் 17ஆம் பந்தியில் உள்ளவாறு நிர்வாக சபைக்கு அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் மாற்று ஊழியர் உட்பட தொழிலில் ஈடுபடுத்தல் சம்பந்தமாக நிபந்தனைகள் தீர்மானங்கள் எடுக்கும் பூரண அதிகாரம் உள்ளது. ஓய்வு பெற்ற பின் மீண்டும் அவரை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்த நிர்வாக சபை தீர்மானித்ததோடு அதற்கான அனுமதி நிர்வாக சபை கூட்ட அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் சிறந்த சேவையினாலும், இவ்வாறான அரச அனுகூலங்கள் பெறாத சுய நிதியீட்டும் நிறுவனத்தை இலாபகரமாக நடாத்திச் செல்வதற்கு அவ்வாறான திறமையான தலைவரின் அறிவு, அனுபவம், ஆற்றல் மற்றும் வழிகாட்டல் தேவை என்பதாலேயே அத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கு அடிப்படையான விடயங்கள் பின்வரும் விதத்தில் என்னால் தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நிர்வாக சபை அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- இப் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் இந் நிறுவனத்தைப் பொறுப்பேற்கும் போது அதாவது 2004ஆம் ஆண்டு இலங்கை அச்சக நிறுவகத்தால் 10 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டதோடு, அவரின் காலப்பகுதியினுள் அவற்றை மல்டிமீடியா தொழினுட்பம் வரை விரிவுபடுத்தி 22 பாடநெறிகள் வரை விரிவாக்கியுள்ளார்.
- 2004ஆம் ஆண்டு இலங்கை அச்சக நிறுவகத்தின் வருடாந்த வருமானம் ரூபா 10 மில்லியனாக இருந்ததோடு தற்போது வருடாந்த வருமானம் ரூபா 39 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

- 2004ஆம் ஆண்டு இலங்கை அச்சக நிறுவகத்தின் வைப்பு ரூபா 9 மில்லியனாக இருந்ததோடு தற்போது ரூபா 108 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.
- இலங்கை அச்சக நிறுவகத்தின் பாடநெறிகளுக்கு NVQ 3,4,5 தரங்கள் கிடைத்துள்ளது.
- இலங்கை அச்சக நிறுவகத்தின் பாடநெறிகளை தரமிக்கதாக ஒழுங்குபடுத்தல், வளர்ச்சியடையச் செய்து நடாத்துதலை மதிப்பீடு செய்து ISO 2009:2015 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- இலங்கை அச்சக நிறுவகத்தை வினைத்திறன் மிக்கதாக கட்டடத்தின் உட்புறத்தை நிர்மானித்து, ஊழியர்களுக்காக உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு நிறுவகத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செயற்பட்டுள்ளார்.
- நவீன தொழினுட்பத்துடனான உலகப் புகழ்பெற்ற Heidelberg வகையிலான 4 வர்ண ஓப்செட் அச்சு இயந்திரத்தை இலங்கை அச்சக நிறுவகத்திற்கு பெற்றுக்கொடுத்தமை.
- இலங்கை அச்சக நிறுவகத்தினால் ஆரம்பித்த அச்சு மற்றும் கட்புல தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறிகள் 2ஐ கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து உயர் டிப்ளோமா பாடநெறி வரை தரமுயர்த்தச் செயற்பட்டமை.
- இலங்கை அச்சக நிறுவகத்தினால் அத்துறையின் தொழினுட்ப வளர்ச்சிக்கும், தொழில் விருத்திக்கும் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பல விசேட நிகழ்ச்சிகள் அவரின் காலப்பகுதியினுள் நடாத்தி நிறுவகத்தின் வருமானத்தை அதிகரித்தலும், துறைசார் சர்வதேச தொழினுட்ப வளர்ச்சியை இலங்கையில் அச்சு மற்றும் கிரபிக் சமூகத்தினருக்கு மத்தியில் கொண்டுவரச் செயற்பட்டமை.
- ஒரு வருட கிரபிக்ஸ் டிசைன் டிப்ளோமா பாடநெறியொன்றை ஆரம்பித்தல். இப் பாடநெறி 2008இல் ஆரம்பிக்கப்பட்டதோடு தற்போது இவ்வாறான 21 பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

மேற் குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு அரச உதவி பெறாத இன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக இவ் உத்தியோகத்தரின் சேவையை மீளப் பெறல் அத்தியவசியமாக இருந்ததால் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய அவரின் சேவைக் காலம் நீடிக்கப்பட்டது.

மேலும் நியாயமான கட்டணங்களில் பாடநெறிகளை நடாத்தி நிறுவகத்தின் ஊழியர்களின் வேதனங்கள் உட்பட அனைத்தையும் செலுத்தி இலங்கை அச்சக நிறுவகத்தை இலாபமீட்டும் அரச நிறுவனமாக வழிநடாத்த இவ் உத்தியோகத்தரால் முடிந்துள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன். அத்தோடு இப் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் திறமையும் ஆற்றலும் காரணமாகவே 2019ஆம் ஆண்டில் இலங்கை அச்சக நிறுவகத்தின் வருமானத்தை கருத்தில் கொண்டு ஊழியர்களுக்கு 50,000 ரூபா பணிக்கொடையாக வழங்க முடிந்துள்ளது.

மேற் குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு இந்நிறுவகத்தின் எதிர்கால இருப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள

அதிகாரங்களுக்கேற்ப இவ் உத்தியோகத்தரின் சேவையை நீடிக்க நிர்வாக சபை தீர்மானித்தது.

இதில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதியினுள் அச்சக நிறுவகத்தின் நிர்வாக சபைக் கூட்டங்களை நடாத்த முடியாமல் போனதற்கான காரணம் அதற்குத் தேவையான பெரும்பான்மை இல்லாமையே. எனினும் அக்காலப் பகுதியினுள் நியமிக்க வேண்டிய பதவி நிலை அங்கத்தவர்கள் 4 பேரையும் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்டிருந்ததோடு அரச அச்சகர் நிர்வாக சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதற்கமைய இந்நிறுவகம் தொடர்ச்சியாக முன்னேறும். இக்காலப்பகுதியில் அவரின் சேவை நிறுவகத்திற்கு அத்தியாவசியம் என்பதாலேயே என்னால் இப் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் சேவை நீடிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெறாத போதிலும் சட்டத்தின் 11ஆம் பிரிவிற்கமைவாக தலைவர் என்ற ரீதியில் நிறுவகத்தின் நிர்வாகத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லவே என்னால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சட்டத்தின் 17ஆம் பந்திக்கமைய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் சம்பளம், வேதனம் அல்லது வேறு கொடுப்பனவுகளை வழங்க நிர்வாக சபைக்கு அதிகாரம் உள்ளது. அதற்கமைவாகவே என்னால் அவரின் வேதனம் 5000 ரூபாவினால் அதிகரிக்க ஆலோசனை வழங்கி அங்கீகரிக்கப்பட்டது. அக்காலப்பகுதியினுள் நிர்வாக சபைக் கூட்டங்கள் இடம்பெறாததால் சட்டத்தின் 11ஆம் பிரிவிற்கமைய செயற்பட்டுள்ளேன்.

(இ) வினா:-

அச்சக நிறுவகத்தினால் தேசிய தொழிற் தகைமையுள்ள ஒரு பாடநெறி உட்பட 13 பாடநெறிகளுக்காக மீளாய்விற்குள்ளான ஆண்டினுள் 932 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருந்ததோடு, அதில் 111 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். 2019ஆம் ஆண்டில் 18 பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவு செய்திருந்த போதிலும் 9 பாடநெறிகளுக்கு (பாடநெறிகளில் 50%) 20 மாணவர்களுக்கும் குறைவாகவே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) விடை

மேற் குறிப்பிட்ட வினாவிற்கமைய 2019ஆம் ஆண்டில் 932 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததோடு அதில் 111 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். இது 11% மாத்திரமே. இது ஏற்றுக்கொள்ளக் கூடிய பெறுமானமாகும். எமது நிறுவகத்தில் சில பாட நெறிகளுக்காக வருடத்திற்கு 15-20 மாணவர்கள் உள்வரும் சந்தர்ப்பங்களும் உள்ளன. பாட நெறிகளுக்கு உள்ள கேள்விற்கமையவே அவ்வாறு இடம்பெறுகின்றது. அப் பாடநெறிகள் அத்துறையில் ஈடுபட்டுள்ள குழுவினர்களுக்காக இடம்பெறும் தொழினுட்பப் பாடநெறி வகையைச் சேரும். குறித்த பாடநெறிக்குத் தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பூர்த்தியாகி அது சமநிலைப் புள்ளிக்கு(BEP) அப்பால் வருமானம் ஈட்டுமென அறிந்த பின்னரே ஒரு பாடநெறி ஆரம்பிக்கப்படும்.

(ஈ) வினா:-

இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 4ஆம் பிரிவிற்கமைய இந்நிறுவகம் பிரதான நோக்கங்கள் 7இன் கீழ் நிறுவப்பட்டதோடு, அதன் 3 நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான நிகழ்ச்சிகள் மட்டுமின்றி சட்டத்தின் 5ஆம் பந்தியில்(இ) பிரிவிற்கமைய செய்ய வேண்டிய பணிகள் 07ஐ செயற்படுத்துவதற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டினுள் வருடாந்த செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) விடை:-

மேற் குறிப்பிட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக ஏற்கனவே கொழும்பு பல்கலைக்கழகத்துடன் உயர் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதற்கமைய இப் பாடநெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அப் பல்கலைக்கழகத்தில் MBA பட்டத்திற்கான அடிப்படைத் தகைமையாக இப் பாடநெறி ஏற்றுக்கொள்ளப்படும். அப்பட்டத்திற்கான அடிப்படைத் தகைமையாக பட்டதாரியாக இருப்பது அவசியமாக இருந்த போதிலும் இவ் உயர் டிப்ளோமா சான்றிதழை தொழிற் தகைமையாகக் கருதி பட்டத்திற்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளல் எமது நிறுவகத்தின் பாடநெறிகளின் பண்புத் தரத்தை மதிக்கின்றமையாவதோடு, அது எமது நிறுவகம் பெற்ற வெற்றியுமாகும்.

இத்தகைமை ஏனைய அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் MBA பட்டப் படிப்பிற்குள் உள்வாங்கும் அடிப்படைத் தகைமையாகவும் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய கொழும்புப் பல்கலைக்கழகம் போன்றே ஏனைய பல்கலைக்கழகங்களிலும் MBA பட்டத்தைப் பெற்ற உயர் டிப்ளோமாதாரிகளை எமது நிறுவகம் உருவாக்கியுள்ளது.

மேலும் உலகப் புகழ் பெற்ற ஜேர்மனி Print Promotion நிறுவனத்துடன் இணைந்து வருடாந்தம் விரிவடையும் அச்சு மற்றும் கிரபிக் தொழினுட்பத்தைக் கற்பதற்காக இலங்கை அச்சக நிறுவக விரிவுரையாளர்கள் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அத்தோடு இந்தியாவின் பஞ்சாப் நகரத்தில் **சீடாக் தொழினுட்ப நிறுவனம்** மற்றும் புதுடில்லியில் **அப்டெக் தொழினுட்ப நிறுவனங்களில்** எமது நிறுவக விரிவுரையாளர்கள் கிரபிக் நிர்மானம் சம்பந்தமாக மேலதிக பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக எமது நிர்வாக விரிவுரையாளர்கள் மட்டுமின்றி பணிக் குழாத்தினர் NIBM நிறுவனத்தில் ஆற்றல் விருத்தி பாடநெறிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சட்டத்தில் குறிப்பிடப்படும் சில நோக்கங்கள் எதிர்காலத்தில் நிறுவகத்தில் இடம் பெறும் அபிவிருத்தி வேலைகளுக்கு இணைந்ததாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவகம் பாட நெறிகளை அறிமுகப்படுத்தும் அபிவிருத்தி வேலைகளை பெரும்பாலும் அண்மித்துள்ள போதிலும் நிறுவகம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை உட்கட்டமைப்பு வசதிகளில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இடித்துவிட உத்தேசித்துள்ள ஒரு பழைமையான கட்டடத்திலேயே இந்நிறுவகம் நடாத்திச் செல்லப்படுகின்றது. இந்நிலையைத் தெளிவுபடுத்தி புதிய கட்டடம்

ஒன்றின் தேவையைப் பலமுறை அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அதற்கான சாத்தியக்கூற்று அறிக்கையை (Feasibility Report) தயாரிக்குமாறு அமைச்சு எமக்கு அறிவித்துள்ளது. அதற்கமைய அதற்கான நிபுணரின் ஆலோசனையின் கீழ் சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் எமது நிறுவகத்திற்கு புதிய கட்டடமொன்று கிடைத்த பின் கட்டடத்திலுள்ள ஏனைய நோக்கங்களை வருடாவருடம் எம்மால் அடையக்கூடியதாக இருக்கும்.

# நிறுவகத்தை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

நிறுவகத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு, கீழ்க்குறிப்பீடு செய்யப்பட்ட தலைப்புக்களில் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்வுகளின் சுருக்கம்

| | | |
|---|---|---|
| மாணவர்களின் உள்ளீடு | - | 931 |
| வருமானம் | - | ரூபா 42,597,961.00 |
| இலாபம் | - | ரூபா 14,826,505 .00 |
| முதலீடு | - | ரூபா 102,531,212 .61 |

## 1. சேவை உற்பத்திகளின் விருத்தி

நிறுவகமானது அதனது கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏனைய செயற்பாடுகளையும் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட வகுதிகளுக்குள் தொடர்கின்றது.

### 1.1 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்




தொழில் வழிகாட்டலுக்கு அபிவிருத்தியினை ஏற்படுத்தக்கூடிய வகையில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களாவன 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும் அல்லது உலகளாவிய மட்டத்தில் ஏற்படும் தொழில்நுட்பவியல் ரீதியிலான மாற்றங்களுக்கு ஏற்ப மீளாய்வு செய்யப்படும்.

### 1.2 கருத்தரங்குகளும் பயிற்சிப் பட்டறைகளும்

நிறுவகமானது, பள்ளிப் படிப்பை முடித்து விலகிய இளம் மாணவர்களுக்காக அவர்களின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அறிவினைப் புகட்டக் கூடிய வகையில், அச்சிடல் மற்றும் டிஜிட்டல் கலை தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் கருத்தரங்கு வகையினைச் சார்ந்த பயிற்சிப் பட்டறைகளை வழங்குகிறது.

இத்துறைகளில் தொழில் செய்து கொண்டிருப்பவர்கள் தமது அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்காக நிறுவகம் தொழில்நுட்பங்கள் சார்ந்த பயிற்சிப் பட்டறைகளின் வடிவில் கருத்தரங்குகளை வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கேற்ற வகையில் நடாத்துகிறது.

### 1.3 விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

இந் நிறுவகமானது, பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளின் கோரிக்கைக்கு இணங்க, அந்த அமைப்பாண்மைகளில் பணியாற்றும் பதவியணியினருக்கு அச்சீட்டு படவரைவியல் வடிவமைப்பு மற்றும் பல் ஊடக திறன் ஆகிய விடயங்களில் அவர்களது அறிவையும் திறனையும் விருத்தி செய்யும் நிமித்தம் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்கின்றது.

### 1.4 அச்சிடல் மற்றும் வரைவியல் தொழிற்துறையினை விருத்தி செய்தல்

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் கைத்தொழிற்துறைகளில் ஏற்படும் அபிவிருத்திக்கு ஒருங்கிணைவாக விருத்தி செய்வதற்காக, நிறுவகமும் அதனது பதவியணியினரும் கண்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டுள்ளனர்.

- விரிவுரையாளர் ஒருவர் அச்சிடல் மற்றும் வரைவியல் தொழிற்துறையின் புதிய தொழில்நுட்ப விருத்திகளைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு மாத காலத்துக்கு ஜெர்மனியின் "ப்ரிண்ட் ப்ரமோஷன்" (Print Promotion - Germany) க்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

- இணையத்தளம் சம்பந்தப்பட்ட தொழிற்றுறையில் மேலதிக அறிவையும் விருத்தியையும் எதிர்பார்ப்பவர்களுக்காக இணையத்தள வரைவியல் டிப்ளோமா பாடநெறியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

- இயந்திரங்களை இயக்குவதில் திறமையுள்ளவர்களுக்காக நவீன பல்வர்ண அச்சீட்டு இயக்க நிகழ்ச்சித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது வெளியூர் சென்று அச்சீட்டுத் தொழிற்றுறையில் தொழில் செய்ய எதிர்பார்ப்புள்ளவர்களுக்கு அவசியமானதாகும்.

- அச்சிடல் மற்றும் டிஜிட்டல் கலை தொழில்நுட்பங்கள் துறையில் என்விகியூ தரம் 4 (NVQ 4) உள்ளவர்களுக்கும் க. பொ. த. (உ/தரம்) முடித்து அச்சிடல் மற்றும் டிஜிட்டல் கலை தொழில்நுட்பங்கள் துறைக்கு வருபவர்களுக்குமாக அத்துறையில் புதிய என்விகியூ தரம் 5 (NVQ 5) டிப்ளோமா பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 2. பிரபல்யப்படுத்துகையும் உற்பத்தி அபிவிருத்தியும்

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படும் கற்கை நெறிகள் தொடர்பான விபரங்களிளை புதினப் பத்திரிகைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், இணையம், சமூக வலைத்தளங்கள் மற்றும் யூ - ட்யூப் என்பவற்றின் ஊடாகப் பிரசுரித்தல்.

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களைப் பிரபல்யப்படுத்தவும் அவற்றைப் பற்றிய தரமான அறிமுகப்படுத்துகைக்காகவும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை இலவசமாக பாடசாலைகளிலும் நிறுவகத்திலும் நடாத்துதல்.

- பொதுமக்களிடையே இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் நாமத்தை பிரபல்யப்படுத்துவதற்காக நிறுவகம் பற்றிய செய்திகள் அடங்கிய கட்டுரைகளை தேசிய புதினப் பத்திரிகைகள், புத்தகங்களில் பிரசுரித்தலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபெறலும்.

- வரைவியல், அச்சீட்டு அபிவிருத்தியும் நிறுவுகையும் மற்றும் அபிவிருத்தி, பல்ஊடகம் மற்றும் வரைவியல் கற்கை நெறிகளுக்கு புதிய ISO சான்றிதழை ISO தரப்படுத்தல் நிறுவனத்திமிருந்து பெற்றுக் கொள்ளல்.

## 3. நிறுவக அபிவிருத்தி

புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவையும் திறனையும் தனது மாணவர்கட்கு வழங்கும் நோக்குடன் அச்சக நிறுவகமானது ஒரு 4 நிற ஓப்செட் அச்சிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்துள்ளது.

நிறுவகத்திற்காக ஒரு புதிய கட்டடம் ஒன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு நிறுவகமானது, 40 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்டதொரு நிலப்பரப்பை பொரளை எனுமிடத்தில் அரச அச்சக திணைக்களத்தின் ஊடாக கொள்வனவு செய்துள்ளது.

புதிய கட்டடத்தின் நிர்மாணத்தின் மூலம் நிறுவகத்தின் செயற்றிறன் அதிகரிப்பதனால் அது நிறுவகத்தின் பதவியணியினருக்கும் மாணவர்களுக்கும் சிறந்த சேவையினை வழங்குவதற்கு ஏதுவாகும். அது மட்டுமன்றி இந்நிர்மாணிப்பின் ஊடாக இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்திற்கு வர்த்தக ரீதியிலாக இருக்கும் நன்மதிப்பானது அதிகரிக்கும். இது தொடர்பில் நிறுவகமானது அரசிடமிருந்து நிதியத்தை எதிர்பார்ப்பதுடன் இக் கருத்திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.